NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 8 December 2020

### கொவிட்-19 தொடர்பிலான உலகளாவிய முயற்சியில் சிங்கப்பூரின் பங்களிப்புப் பற்றி துணைப் பிரதமர்

# புத்தாக்கம், ஒத்துழைப்பில் முதலீடு தொடர வேண்டும்

கொரோனா கொள்ளைநோய்ப் பரவலிலிருந்து மீண்டு வரும் உலகளாவிய முயற்சியில், சிங்கப்பூரின் பங்களிப்பாக தொடர்ந்த முதலீடு, அனைத்துலக அளவிலான ஒத்துழைப்பு ஆகியவை இருக்கும் என்று துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தால் புதிய வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்பதால், நிறுவனங்கள், ஊழியர்கள் மேம்பாட்டுக்கு அனைவரையும் உள்ளடக்குதல், நிலையான வளர்ச்சி ஆகிய வழிகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதில் சிங்கப்பூர் அதிக கவனம் செலுத்தும் என்றும் திரு ஹெங் விவரித்தார்.

நேற்று தொடங்கிய சிங்கப்பூர் நிதித் தொழில்நுட்ப விழா மற்றும் சிங்கப்பூர் புத்தாக்க, தொழில்நுட்ப வாரம் 2020இன் தொடக்க விழாவில் பேசிய துணைப் பிரதமர், பல சமூகங்களில் தலைதூக்கியுள்ள சமமின்மை பற்றியும் உலகளாவிய மீட்சித் திட்டங்களில் உலக நாடுகள் அனைவரையும் உள்ளடக்கும் வழிகளை எவ்வாறு அணுகலாம் என்பது பற்றியும் கொவிட்-19 நெருக்கடி வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது என்பதைச் சுட்டினார்.

வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் இவ்விழாவில் 130 நாடுகளைச் சேர்ந்த 60,000 பேர் பங்கேற்கின்றனர்.

“நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு விழுக்காட்டை ஆய்வு, மேம்பாட்டுத் திட்டங்களில் அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் முதலீடு செய்கிறது. தொழில்நுட்பச் சுற்றுச்சூழல் முறையில் தனது ஆற்றல்களை மேலும் மேம்படுத்திக் கொண்டு வருகிறது. புத்தாக்கத்தில் நமக்குள்ள கடப்பாடும் ஒன்றாக இணைந்து பணியாற்றுதலும் பொருளியல் மீட்சிக்கும் வளர்ச்சிக்கும் முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன.

“சிங்கப்பூர் நாணய ஆணையம், தேசிய ஆய்வு அறநிறுவனத்தின் ஆதரவுடன் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆசிய மின்னிலக்க நிதிக் கழகம், தனது முதல் திட்டமாக தரவுப் பகிர்வுத் தளத்தை உருவாக்கும்.

“இதன் மூலம் கடன் மதிப்பீடுகளை மேம்படுத்தும் தொழில்நுட்ப மாதிரிகளுக்குப் பயிற்சி அளிக்கும். இது சிறிய நிறுவனங்கள் தங்கள் நிதித் திட்டங்களை மேம்படுத்திக்கொண்டு, கொள்ளைநோய்க்குப் பிந்திய காலத்தில் வலுவாக மீண்டு எழுவதற்கு வழிவகுக்கும்,” என்றும் விளக்கினார் நிதி அமைச்சருமான திரு ஹெங்.

சிறிய, நடுத்தர நிறுவனங்கள் மின்னிலக்கத் தீர்வுகளை ஏற்றுக்கொள்ள உதவுவதன் மூலம் அவற்றின் ஆற்றல்களைப் பெருக்கிக்கொள்ள சிங்கப்பூர் எவ்வாறு உதவி வருகிறது என்பது பற்றியும் திரு ஹெங், விழா பங்கேற்பாளர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

“இன்னும் அதிகமாக தாக்குப்பிடிக்கக்கூடிய உலகளாவிய பொதுவான அம்சங்களை உருவாக்குவதற்கு, இன்னும் அதிகமானோரை உள்ளடக்குதலும் நீடித்து நிலைத்திருப்பதுமே கொவிட்-19க்குப் பிந்திய எதிர்காலத்துக்கு அடிப்படையாக விளங்கும்.

“அதற்கு தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்த ஊக்குவிக்கும் வலுவான ஆளுமை தேவை. அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான, நெறிமுறைகள் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தி, அவர்களைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்கும்,” என்றார் துணைப் பிரதமர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.